
சித்திரை
விஷுவின் மலர்
I
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# சித்திரை!

## விஷுவின் மலர்!

## I

# பொருளடக்கம்


1. அன்பு, அறிவு, பொறுமை, பணிவு---------------------------௨


௨. நாமரூபத்தை ஏன் தள்ளு தள்ளு என சொல்கிறார்கள்?-௪

௩. ஸ்ரீபகவானை அறிவால் கண்டுணர்வது என்றால்-----------௫

௪. கலியுக சிருஷ்டி-------------------------------------------௯

௫. நித்தியாவின் கேள்வியும் ஓர் பைத்தியத்தின் பதிலும்----1௫


எல்லாம் நீ!



ஸத்திய வாக்கை (1)


ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

ஸத்தியம் பேசுவோம், தர்மம் நிலைபெறும்!

ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை!
நம்பினோர் கெடுவதில்லை!
தெய்வம் மனுஷ்ய ரூபேணம்!
யத் பாவம் தத் பவதி!
ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய ஜெய ராம்

ஓம்

அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம்,
அகமே எல்லாம்!
ஜெகம், பரமும், ஜீவர்களும்
சிறிதும் இல்லை!





அன்பில்லாதவன், அகங்காரத்தாலும், ஆத்திர அதிகாரத்தாலும், தன்மான ஆதிக்கத்தினாலும், அவசர வேகத்தினாலும், அழிவையும், ஜனன மரணத்தையும், அடைகிறான்.

அறிவில்லாதவன்; அதாவது, இறை உணர்வு இல்லாதவன்; சபலம், சலனம் சந்தேகம், இவைகளின், கலக்க பயத்தில் வீழ்ந்து, ஜனனபிறவியை அடைகிறான்.

பொறுமை இல்லாதவன்; எதையும், பொறுத்துக் கொள்ள இயலாமல்; வாழ்வில் துன்பத்தையும், வினைப் பெருக்கத்தையும், தாமே தேடிக் கொள்கிறான்.

பணிவு இல்லாதவன்; வளைந்து கொடுக்க இயலாமையால், நெடுமரம் போல் நின்று ஒடிந்து, வாழவும் முடியாமல், சாதனையும் செய்ய இயலாமல், அழிவை தேடிக் கொள்கிறான்.




அப்படி நாம ரூபத்தை தோற்றும் மனமானது அந்த நாம ரூபங்களில் அஹங்கார, அதிகார, ஆதிக்கத்தால் உடைமையும், உரிமையும் கொண்டாடினால் அவை புண்ணிய பாபமாகவும், ஜனன மரணமாகவும் மாறி பிறவிச் சுழற்சியை அதிவேகமாக உண்டுபண்ணும்.

அன்பே உருவானவன். பணிவு, பொறுமை, கனிவு, ஓர்மையுடன் திகழ்வதால், வேகதாபங்கள், இல்லாத தன்மையினால், தேவையும், ஆசையும், இல்லாதவனாய், போதும் என்ற, பரிபூரண, நிறைவுடையவனாய், ஜீவன் முக்திக்கு தகுதி உடையவனாகிறான்.

அறிவே தாம் ஆனவன். சர்வார்ப்பணத்தால், கர்மாக்களை, துறந்தவனாய், சாட்சி நிலையையும். பின் சர்வ சாட்சி நிலையையும் பெற்று ஜீவன் முக்தியை அடைகிறான்.

பொறுமையே, கவசமாக கொண்டவன். சகித்தல், விட்டுக்கொடுத்தல், எல்லாம் நலமே என ஏற்றல், இவைகளால், பக்குவம் ஆகி, இருப்பது ஒன்றே, நடப்பது நலமே, என்ற பூரண நிறைவினால், ஜீவன் முக்தனாகிறான்.

பணிவே பாதையாக கொண்டவன். எதிலும் முட்டாமல், மோதாமல் எதிராளுக்கு தீங்காமல், சாதனையில் சோதனைகளை எல்லாம், வளைந்து நெளிந்து சென்று, ஜீவன் முக்தனாகிறான்.




ஒன்றை பலபல (4)
நாம ரூபங்களாக கற்பனை பண்ணுவதும் அதன் இயக்க குணங்களை கற்பனை பண்ணுவதும் மனமாகும். அக்கற்பனையை விடாமல் இருந்தால் அதுவினையாகும்.

நாமரூபத்தை/ ஏன் தண்ணு தண்ணு/ எனச் சொல்கிறீர்கள் என்றால்? அறிவு ஒன்றை உணர்ந்தால்; ஜட ஜீவ, தோற்றங்கள் தாவர வர்க்கங்கள், உட்பட எல்லாமே மண்ணே! மண்மயமே!! வெறும் மண்ணாக இருக்கும் பொழுது, இருப்பு மட்டும் உண்டு. அதற்கு இயக்கம் இல்லை. இருப்பில் எக் குணமும் இருக்க இயலாது. இயக்கம் உண்டாகும் போது, சகல குணங்களையும் ஏற்கும். இயக்கமும், அதன் குணங்களுமே, புண்ணிய பாப, வினை சம்பந்தம் கொள்கிறது. ஆகவே அது, ஜனன மரண சுழற்சிக்கு ஏதுவாகிறது. வெறும் மண்ணே, இருப்பில் இயக்கமும், அதன் குணமும், இல்லாத தன்மையால் அங்கு புண்ணிய பாபமும்/ ஜனன மரணமும்/ பற்றுவதில்லை. ஆகவே தான் காவாதீத பரத்திற்கு ஸ்ரீ மஹான்கள்/ உவமானமாக, மண் வடிவம் கொடுத்தார்கள் என உணர வேண்டும்.




பூர்வ நாம ரூபங்களையும் விரிவடையாமல் எல்லாம் மண்ணுக்கு அன்னியமில்லை என்றிட உணர்வோடு அந்த மண்ணை நாம் என்று நம்மையும் அதனையும் ஒன்றுக்கி ஐக்கியப்படுத்துவது அறிவாகும்.

ஸ்ரீபகவானை அறிவால் கண்டு உணர்வது என்றால் :– காவாதீத பரசொரூபமானது, இருக்கிறது என்ற ஓர் இருப்புத் தன்மையை மட்டும், உடையதாக இருக்கிறது. அப்பரமானது சொல்லும், பொருளும், அதாவது, நாம ரூபம் அற்றதாகும். அதேபோல், உனக்காகவே, அப்பரமானது, ஸ்ரீபகவான் ரூபம் எடுத்து வருகிறதென்று, உணரவேண்டும். அது தானே இறங்கி வராது. வரஇயலாது. ஏன் என்றால் அங்கு, நாம ரூபம் இல்லை. ஆனால் நீயோ, அப்பரம் பொருளிலிருந்து, பிரிந்து வந்து, நாம ரூபம் தாங்கி இருக்கிறாய். உன்னைப் போல், ஓர் நாம ரூபம் நீதான் கொடுக்க வேண்டும். உன் மனதின் கற்பனை, ஜகத்திற்காகும். உன் அறிவின் கற்பனை, பரம் என்ற, தெய்வீகத்திற்காகும். உன் மனதின் கற்பனை, அங்கு செல்லாது. உன் அறிவின் கற்பனை, அங்கு செல்லும். எப்படி என்றால்




அறிவே ஆன்மா என்றும், அறிவே ஸ்ரீ பகவான் என்றும், ஆதிஸ்ரீமஹான்கள் சொல்வதால், உன் அறிவைக் கொண்டு நீயே ஓர் வடிவம் கொடுக்க முடியும். பரமும் இருப்புத் தன்மை, மட்டும் உடையது. அதே போல் திரிகர்த்தாக்களும், வரவும் இல்லை. அவர்கள் மறையவும் இல்லை. இருக்கிறோம் என்ற இருப்புத் தன்மையை, மட்டும் உடையவர்கள்.

இப்போது, மனதின் கற்பனை என்றால், நாமரூப கற்பனையால், பூ/பிஞ்சு/காய்/கனி/ என நான்கு நிலையில் தான், வடிவம் கொடுக்க முடியும். ஆனால் அறிவின் ஸ்திரத் தன்மையால் பழம் என, ஒன்றின் கற்பனையை மட்டும், கொடுக்க முடியும். கொடுக்க இயலும். நாமரூப கற்பனை தோன்றா வில்லையென்றால், இந்த அறிவின் கற்பனை, அவசியம் ஸ்திரமாகும். பூ/பிஞ்சு/காய்/கனி/ என்றால் அது நாமம்/ரூபம்/குணம்/குறி/ என முறையே தாங்கி நிற்கும்.



காலாதீதமான்றோ (7)
சக்தியும் என்ற
நிலையில், பழம்
ஒன்றே முந்தையது என
அறிவுபூர்வமாக
உணர வேண்டும்.
இங்கு வித்து (பழம்)
ஒன்றே முதலம் என
ஸ்ரீமஹான்களின் அனு
பவமாக இருப்பதால்,
பழம் என ஒன்றை மட்டும்
எடுத்துக் கொண்டு அதுவே தோற்றம் என்றும்.
அதன் சுவையே பிரம்மம் என்றும் உணர வேண்டும்.
முடிந்தும்

இந்த நான்கில், மூன்றை, விலக்கி விட்டு, பழம் என ஒன்றை மட்டும், வரிக்க வேண்டும். நம் கூர்ந்த அறிவால்! அப்பழமே அனைத்திற்கும், ஆதாரம்! ஆதரவு! ஆகாரம்! என முடிவு செய்ய வேண்டும்.

இங்கு பிரம்மனுக்கோ! நாராயணனுக்கோ! சிவ பெருமானுக்கோ! எந்த ஆயுத முமே இன்றி, வடிவம் ஐந்து வயதுக்கு உட்பட்ட, ஓர் குழந்தையாகவும், அது உன் குழந்தையாகவும், அறிவின் நிலையில், பாவனை பண்ண வேண்டும். அதை குழந்தையாக, பாவனை பண்ணினால் தான், உன்னையும், ஓர் குழந்தையாக, பாவனை பண்ண முடியும். நீ ஓர் குழந்தையான நிலையில், பேதம்! அதனால் தோன்றும், விருப்பு வெறுப்பு! அதனால் தோன்றும் குற்ற உணர்வு! அவசியம் நீங்கி விடும். நீங்க வேண்டும். நீங்கினால் தான், நீ அறிவாக இருக்கிறாய் என, பொருள்படும்.




இங்கு ஸ்ரீ பகவானை இயக்கம் அற்ற வகை சாற்றியது பரசொரூப சொல் விளக்கத்திற்கே எனமட்டும் உணர்க. சுவைக்கும் உன்னையும் ஓர் பழமாகவும் அதுவும் இயக்கம் உற்றவனாக உன்னை அறிந்துணரவும்.

இருபழமும் தோற்றத்தில் மட்டும் இரண்டு.
" " சுவையால் ஒன்றென உணரவும்.
தொடரும்

இங்கு நீயும் ஓர் பழம். ஆனால் வெகுவனை இயக்கம் உள்ளவனாக இருக்கிறாய். அப்பழம் ஆகிய, ஸ்ரீ பகவானோ இயக்கம் அற்ற ஓர் அழகிய பழமாக மட்டும் இருக்கிறான். (இது உவமானம்)

இப்போது, நீ காணும் நிலையில், ஸ்ரீ பகவான் ஓர் பழமாக இருக்கிறான். அங்கு உன் ஸ்ரீ பகவானை அவனை யாம்! யாமே அவன்! என்று உண்டு சுவைத்து விட்டால், அங்கு பழம் தோற்றும். சுவை ஒன்று தான், தோற்றும். இங்கு தான்.

**நீயும் பழமும் கனிகாண்!**

**(நம்) இரு இருப்பது சுவைகாண்!!**

என்ற நிலை பெற முடியும்.


குறிப்பு:— பழம் சுவைக்காமல், ருசியை உரைக்க முடியாது. அப்பழம்/ நாமரூபம் கெட்டழிந்தாலன்றி, சுவையை உணரவும் முடியாது. நாம் அது என ஆகவும் முடியாது.



மோஹாவேசமானது
நாம போஹத்தில்
ஸ்ரீ கடிக்கும் 9
இவ் வேகத்தின்
போஹமானது அருவி
யைப் போலும், அலையைப் போலும், தொடரும்

கேள்வி:- ஹே அன்பான பாபா ஜீ! ஓர்
சிறிய கேள்வி? அதாவது இப்போது உள்ள
சூழ்நிலையில், ஜீவ வர்க்கங்கள்! அதாவது,
மனித இனம் உட்பட, புழு பூச்சிகள் என்றும்.
இனம் அறியாத, கிருமி கீடகங்கள்! என்றும் பெயர்
இனம், அறிய முடியாத, ஜீவராசிகளின்
கூட்டம், பல வகையும்! பல கோடி என்ற
நிலையில், தோன்றுகின்றன, மறைகின்றன.
இவைகள் எல்லாம், பரமாணுக்கள் என்றும்
ஆத்மா என்று தானே, சொல்லப்படுகிறது.
இவை எப்படி பெருகுகிறது? இவற்றின்
ஆதாரம் என்ன? இவைகளுக்கு, ஏதேனும்
கணக்கு உண்டா? சற்று விளக்கம் சுருக்
கமாக கொடுக்கவும்?

பதில்:- குழந்தாய்! இது நல்ல கேள்வியே!
பயன் உள்ள கேள்வியே! ஆனால் இக்கேள்வி
யை, இது வரை எவரும் கேட்டதில்லை. ஆனாலும்
நீ கேட்டு விட்டாய்? பரவாயில்லை. கவனமாக



பனித்துளி சிதறுவதைப் போல் 10

தூவானம் போல்

ஆவேச சிருஷ்டியாகமானி துன்பம் தரக்கூடிய இனப் பெருக்கத்தை உண்டு பண்ணும். ஆத்திர, அவசர, ஆவேச தொடரும்

கேட்பாயாக. இது கலியுகம். அதாவது, கலிக்கே உரிய யுகம். ஆகவே அ சரம்! வேகம்! படபடப்பு! பருவேகம்! பதறல்! அதறல் சிதறல்! என இனப் பெருக்க காலம் ஆகும். அருவி பாறைகளில், விழுந்து சிதறும்போதும், கடல் அலை, பாறைகளில், மோதி சிதறும்போதும், ஓங்கி பெய்யும் மழைச்சிதறல் தூவானம், கிளம்பும் போதும், நீர்த் திவலைகள், அணு அணுவாக, பனித்துளி போன்று, சிதறுவதை காணலாம். நீர்த்துளிகளாக, வரும் போது, எண்ணிக்கை குறைவாக இருக்கும். அணுவின் நிலைகள், பனித்துளிகளாக மாறும் போது, எண்ணிக்கை, லட்சம்! கோடி! பல்பல கோடி! என பெருகவும் செய்யும். இது அவசர யுகம். இது மோதல் – சிதறல்! என விகாரமும்! அதறல் விவகாரமும் உண்டாகும் காலமாகும். மேலே கூறிய நிலையில்,



ஆக்ரோச இசை

பெருக்கமானது

விரோத! குரோத!

கோபாவேசத்திற்கு

உறுதுணையாகி அதுவே

கலியுக அழிவின் பாதைக்கு வழிவகுக்கிறது

முழுக்கவும்.

மோதல் & சிதறல்! நிலையில் எண்ணிக்கை பெருகுவதும். அவை வெவ் வேறு, நாமரூபம் பெறுவதும் இக்கலியில், சகஜமே. ஆனால்


அளவு கூடுவதும் இல்லை. குறைவதும் இல்லை.

ஆனால்?


நாமரூபம் கூடும்! குறையும்!

ஒன்றுமற்றொன்றாய் மாறும். ஒன்று மற்றொன்றினுள் மறையும். இது விகார குணமுள்ளது. மனதிற்கே இக்காட்சிகள் ஆகும். அறிவுக்கு காட்சியும், வீழ்ச்சியும்! எழுச்சியும்! இல்லை.

நாமரூபம் பெருகினால் தான், விரோத குரோத, துவேஷ குணங்கள் பெருகி ஒன்றுடன் ஒன்று, மோதி, அழிவுப் பாதையை நோக்கி அதிவேகமாக போக முடியும். இக்கலியுகத்தின் சிறப்பு அம்சமும் அதுதான். இதில் இன்னொரு சிறப்பு என்ன வென்றால்?




இம்மனிதன், தம் மகிமையை, திறமையினை (அறிவின் திறமையில்) ஒரு நாமரூபத்தை, விஞ்ஞான நிலையில் அழிப்பான். அந்த நாமரூபம், வேறு பல பல நாமரூபம் தாங்கி வந்து, இவனைத் தாக்கும். ஒரே போராட்டமாகவே, இக்கலியுகம் ஜே! ஜே! ஜே! என முழங்கி அழிவை நோக்கிச் செல்லும். இவன் கண்டுபிடிக்கும், (விஞ்ஞானத்தின்) நூதன மருந்து, ஒன்றை அழிக்கும். பலவற்றை உண்டு பண்ணும். அது இவனுக்கே தெரியாமல், நூதனமாக நடைபெறும். தான் கண்டுபிடிக்கும், நூதன (விஞ்ஞான) மருந்தினாலேயே, இம்மனிதன் தன், அழிவை தேடிக் கொள்வான். இதை அறிந்தும், மனம் பதைத்தும் பாடாகும். அறிவில் நிலைத்திருப்பவர்களுக்கு, இச் சோதனையும், வேதனையும், இல்லவே இல்லை.




இக் கலியுகமானது, மோஹா வேசத்திலும்! கோபா வேசத்திலும்! சிருஷ்டியையும்! அழிவையும்! உண்டு பண்ணிக் கொள்ளும். அதாவது?

மோஹாவேசம்:- மோஹம்! காமம்! போஹம் இவைகளின், வேகத்தில், இனப்பெருக்கத்தை உண்டு பண்ணிக் கொள்ளும். இன்றைய எந்த ஜீவனையும், உற்றுணர்ந்து நோக்கினால், அனைத்துமே, மோஹத்திலும், காமத்திலும், போஹம்! அனுபவிக்கும் நிலையில், ஒன்றின் பின் ஒன்று, வேகமாக, அலைவதை காணலாம். இது மோஹா வேச சக்தியாகும். இது இனப்பெருக்கத்தின், வேகமாகும்.

கோபாவேசம்:- விரோதம்! குரோதம்! கோபம்! இவைகளின், வேகத்தினால், ஒன்றை ஒன்று, விரோத குரோதத்தை, மறக்க முடியாமல்,



புருஷகாரியம் (14)
ஒருது! என்ற
நிலைபெறவாம்.
இங்கு நம்பினர்
தெய்வநிலையில் என்ற
நிலையில்; தெய்வம்
மனுஷ்யாரூபம்! என்ற
அனுபவநிலையில் தெய்வம் மனித வடிவில்
அவசியம் ரக்ஷிக்கும். இது சத்தியம்.
முடிந்தது.

கோபாவேசத்தினால், பழி தீர்க்கும்
எண்ணத்துடன், ஒன்றுடன் ஒன்று, மூட்டி,
மோதி, சிதறி, கதறி, பதறி, அழிவதை இன்
றும் நேருக்கு நேராக, காண்கிறோம். இது

# அவசர சிருஷ்டியின்,
நிலை
# அவசர ஆவேச அழிவாகும்,

இது பரமாணுக்களை, (ஆத்மாவை) ஜீவ
போர்வை, மூடுண்ட தன்மையினால், வினை
யை வைத்து, மனதால் ஆட்டப்பட்டு, விதி
தேவன், முடிக்கும் காரியமாகும். நாம்
அறிவாகவே, இருந்து விட்டால், இந்த
ஆட்ட பாட்டமெல்லாம், நமக்கில்லையென,
சும்மாவே, சுகமாகவே, இருக்கலாம்.



ஸத்திய வாக்கை 

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்

## ஸ்ரீபகவான் நம்பிக்கை ஏன்?

ஓர் ஸந்தான குழந்தை, நித்தியாவின், கேள்வியும்? ஓர் வைத்தியத்தின், பதிலும்,

நித்தியா:— ஓ எம் அன்பான பாபாஜீ! ஸ்ரீபகவானைப்பற்றி, உண்டென்றும், இல்லை என்றும் ஞானிகளிடம், பேசப்படுகிறதே! அதுபற்றி, சில விளக்கம், தேவைப்படுகிறது. அது பற்றி விளக்கம் தரவாமா?

வைத்தியம்:— ஸ்ரீபகவானைப்பற்றி, ஸ்ரீபகவானிடமே, கேள்வியா? ஆதாரமாக கேள்? விடைபெறுவாய்.

நித்தியா:— அப்படியானால் தாங்களே ஸ்ரீபகவான், என்றே ஒப்புக்கொள்கிறீர் களா பாபாஜீ?

வைத்தியம்:— அதில் என்ன சந்தேகம்? யாமும், ஸ்ரீபகவானே, நீயும், ஸ்ரீபகவானே, ஆனால் மாறுபட்ட, இருவேஷங்களாகும்.




மோஹாவேசம்:- (16)
இக் கலியுகம்
அவசர யுகம் ஆகும்.
அவசரம்! ஆவேசம்!
என வரும் போது
இனப் பெருக்கம்
அதிகம் இருந்தால்தான்
முட்டி! மோதி! சுற்று தருங்கு

என நோயகம்


வைத்தியம்:- நீயோ நீ போட்ட வேஷத்தில்
வேஷத்திலேயே, மயங்கி இருக்கிறாய். ஆனால்
யாமோ, இது வேஷம்தான் என, உணர்வோடு
இருக்கிறோம். அவ்வளவுதான், வித்தியாசம்.

நித்தியா:- எப்படி பாபா! யாம் மயங்கி
இருக்கிறோம் என்றும். நாங்கள் மயங்கவில்லை
என்றும். ஸ்திரமாக சொல்கிறீர்கள்?

வைத்தியம்:- ஒருகுழந்தாய் நித்தியா! இந்த
உன்னுடைய தோற்றத்தை, யாம் ஓர் பெண்
என்றும். இன்னாருடைய மகள்! என்று தானே
எண்ணுகிறாய்?

நித்தியா:- ஆமாம், அப்படித்தான் எண்ணு
கிறோம். அப்படித்தானே எண்ண முடியும்?
வேறு வகையில், எண்ண முடியாதே பாபா?

வைத்தியம்:- இந்த எண்ணங்கள் மெய்யா?
பொய்யா? சற்று உள் நோக்கி, உணர்ந்து சொல்?





நித்தியா:— ஹே அன்பான பாபாவே!
உலக, உடல், உறவு, சுற்றம், நிலையில்,
சொல்வதாக இருந்தால், யாம் எண்ணுவது
சொல்வதும், பைத்தியமே! உங்களிடம்
பாடம் கேட்கும் நிலையில், இது சுத்தப்
பொய்யே! (லோகத் தோற்றம் வாக்கும் பொய்யே)
பைத்தியம்:— உனக்கு எது முக்கியமாக
தோற்றுகிறது?
நித்தியா:— இப்போது கண்களுக்கு, தோற்
றுவதைத் தானே நம்ப முடியும்? தோற்று
வதை, எப்படி நம்ப முடியும்? உதாரணத்
திற்கு, ஜலத்தை, நேருக்கு நேர் காண்
பதால், ஜலத்தை உண்டென நம்பலாம்.
அதனுள் மறைந்து கலந்திருக்கும், உப்
பையோ! சர்க்கரையையோ! கண்களால்
காணல், எப்படி நம்ப முடியும்?



ஒன்றை ஒன்று விடாமல் பின் (18)
சென்று இனிப் பெருக்
கத்தினாலே
ஸோ/ஸோ/ஸோ
என வெறி உணர்ச்சி
யுடன் முட்டி மோதி அலை
கின்றன. அந்த இவைப்
பெருக்கத்தையே சொர்க்க வாசல் போலும்
எனக்கருதுகின்றனர். முடிந்தது.

நித்தியா :- அச்சவத்தை/சுவைத்து
பார்த்தால் தானே, அது உப்பா? சர்க்கரை
யா?
என சொல்ல முடியும்?
அதேபோல், தூல வேஷங்களை, கண்களால்
காண்கிறோம். ஆகவே அவைகளை, உண்டு
என நம்புகிறோம். உண் இருப்பவனை
இருப்பதை, எப்படி உண்டு என, நம்ப முடியும்
பாபா?
வைத்தியம் :- ஓ என் அருமை குழந்தாய்! நித்தி
யா!
தெய்வம் (நோயில்) தோன்றாத துணைவன்! என்பதையும்,
தெய்வம் மனுஷ்யாகும்!! என்பதையும்,
ஸ்ரீமஹான்கள் சொல்லியும், அனுபவ வாசக
ங்களை, எப்படி ஏற்றுக் கொள்கிறாய்? இவை
இரண்டும், பொய்யா? மெய்யா?




கோபா வேசம்:- (19)
நாமரூப பொரு
ளின் மோஹத்தினால்
உண்டாகும் போட்டிக்
பொறாமையால்! குரோத
மும்! குரோதத்தால்! வி
ரோதமும் உண்டாகி அத
னால் பழிச் சொல்லும்
பாவச் செயலும் உண்டாவதும் தொடரும்.

நித்தியா:- ஸத்தியமாய் நம்புகிறேன் பாபா! உள்ளே இருக்கிறான் என்றோ, உள்ளே இருக்கிறது என்றோ காண வேண்டுமே! அதற்கு வழி உண்டா பாபா?

பைத்தியம்:- அவசியம் உண்டு நித்தியா! முன்பே சில மடல்களிலும், நேரடி உரையாடல்களிலும், விளக்கம் கொடுத்ததை, கருத்தூன்றி கவனி?

உன் 20 வயது மையன்! ஓர் நாடக மேடையில், பெண் வேஷமிட்டு நடிப்பதை, நீ உன் கண்களால் காணும் போது, ஒரு பெண்ணைக் காண்பாயா? அல்லது உன் மையனைக் காண்பாயா?

நித்தியா:- உண்மை தான் பாபா! அங்கு ஓர் பெண்ணைக் காண் **காண்போம்!**
ஆனால் எம் மையனை **உணர்வோம்!!**



௨0

நாமரூப குண
பேதங்களால்
உண்டாகும் விரோத
குரோத மானது தீராத
பழியாக மாறி,
பஞ்சமகா பாதகங்களை
உண்டாக்கி விரோதம் இன்றி
வல்வினை பெருகும். தீராத
துன்பத்தை கொடுக்கும் என உணரவும்.
முடிந்தது.

வைத்தியம் :- இது எப்படி சாத்தியமாயிற்று?

நித்தியா :- அது என் மகன். இருபது வருடங்கள் காலமாக, அவனை கண்ணை இமை காப்பது போல், காத்து, போஷித்து, இரவு பகலாக கண்டும் கேட்டும், பேசியும், அனுபவித்தும், வந்திருக்கிறேன்! அவனை எப்படி மறக்க முடியும்? ஆனால், நம் ஸ்ரீபகவானை! ஒருமுறையாவது காண வில்லையே! காண முடியவும் இல்லையே! ஒருமுறையாவது கண்டால் தானே நம்ப முடியும் பாபா? காட்டுங்கள்! அந்த ஸ்ரீபகவானை நீங்கள் அறிவீர்களா? அப்போ தானே எங்களால் நம்ப முடியும் பாபா?

வைத்தியம் :- அதிசயமாகவே சிரித்து விட்டு கொழுந்தே! நித்தியா! நல்ல கேள்வியே கேட்டாய்! யாம் வாக்கை வாங்கி, வாக்கை கொடுப்போம். ஆனால் நீயோ, உன் வாக்கை எம் வாக்காக மாற்றி, அவ் வாக்காகவே யே.



21


# உறவுகள்

அனைத்து நாம ரூபங்களுக்குள்ளும் ஸ்ரீபகவானே அந்தர்யாமியாக இருந்து கொண்டு அந்தந்த ஜீவன்களை அதனதன் விதியின்படி எக்குறையும் இன்றி நடத்தி வருகிறான்: தொடரும்.

எம்மையே, சிறைப்பிடிக்கப் பார்க்கிறாயா? பலே பலே! பேஷ் பேஷ்! நீயோ! எம் தவச் செல்வம். மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கவும் வேண்டுமா? சரி சரி! உன்னை ஓர் கேள்வி கேட்கிறேன்? உன் பதில், எப்படி வருகிறது என்று பார்ப்போமே? கவனம் தேவை.

நீ பெற்றெடுத்த குழந்தை! உன் வளர்ப்பிலேயே, வளர்ந்த குழந்தை! ஆகவே, இருபது வருஷ அனுபவம் என்றும், இருபது வருஷமாக, பார்த்துக் கொண்டே இருக்கிறேன் என்றும், சொல்லுவது சத்தியமே!

சற்று முன், ஓர் பதில், உன்னிடம் இருந்து வந்ததே. அதாவது, நாடக மேடையில் நடிக்கும் எம்மையனே! ஓர் பெண்ணைக் காண் காண்போம்! என்றும், எம்மையனைக் உணர்வோம் என சொன்னையல்லவா? ஞாபகம் இருக்கா?



ஆனால் மனம் வசம் அகப் பட்டோர் நாம ரூபத்தை காண் கின்றனர். உள் இருப்பவனை உணர முடியாமல் வீண் கற்பனை குற்றங்களுக்கு ஆளாகி விடுகின்றனர். இது இவர்கள் மனதின் குற்றமே! ஸ்ரீபகவான் குற்றமில்லை. முடிந்தது.

22

நித்தியா :- அப்படி இருநிலைகளில், சொன்னது வைத்தியமே. அதாவது, நடிக்கும் அந்த காலத்தில் மட்டும் :— காண்பது ஓர் **பெண்!** உணர்வது எம் **மகன்!**

வைத்தியம் :- ஓ எம் அருமை நித்தியா! இதை சற்று மாற்றிப்பார் பார்ப்போம்? உன் பையனின் வேஷத்தினுள் உன் பையன் வேஷம் போட்டுக் கொண்டு; ஸ்ரீபகவான்! இருபது வருஷமாக நடித்துக் கொண்டிருக்கிறானே. அந்த, ஸ்ரீபகவானை! நீ காண வேணுமென்று, துடித்ததுண்டா? ஏங்கியதுண்டா? கண்ணீர் விட்டு உருகியதுண்டா? ஹே பிரபோ! கமல நயனா! கருணைக்கடலே! உன்னைக் காணாமல், இந்த ஜன்மா ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்?



அன்று ஒரு நாள் (23)
மட்டும் உன் மகனே
ஓர் பெண்ணை கண்டு
ஏமாற்றினாய். ஆனால்
இன்று வரை இருபது
வருடமாக ஸ்ரீபகவான்
உன் மகன் என்ற ஓர்
பொம்மை சட்டையை
போட்டுக்கொண்டு உன்னை ஏமாற்றிட வருகி
றான் என்பதை ஏன் நீ உணரவில்லை ?????
தெரியுமா.

எனக்காக, பக்காக உருகி, அழுததுண்டா?

அன்று ஒரு நாள் தானே! (நாடகத்தில்) உன் மகன் உன்னை

ஏமாற்றினான் ????

இப்போது இருபது வருடமாக உன் ஸ்ரீபகவான்!

உன்னை ஏமாற்றி நடித்து வருகிறானே!

இதை ஏன் நீ உணரவில்லை.

அவன் உள் இருப்பை உணர்ந்து,


உன் மகன்! வெளி தோற்றத்தை மறந்து,

உள்ளே! உள்ளவனை, காண நீ!

உருகி, கதறி, அழுது, வேண்டினால்?

அவன் ஸ்ரீபகவான் காட்சி அவசியம்

பெறலாமே!!!




நித்தியா:— ஹே அன்பே உருவான பாபா! அறிவின் சிகரமான பாபா! கருணை கடவான பாபா! எம் அறிவுக் கண்ணை திறந்து விட்டீர்கள்! சொந்த, பந்த, பாச, பற்று, மனக் கண்களை மூடி விட்டீர்கள்.

கண் இருந்தும் குருடாய்! காது இருந்தும் செவிடாய்! வாய் இருந்தும் ஊமையாய்! இத்தனை காலமும், வீண் அடித்து விட்டோமே! (அவ் வைத்தியம் இடைமறித்தது) என கதறி அழுதது.

வைத்தியம்:— அம்மா நித்தியா! சற்று பொறு! பொறு!! பொறு!!! நீ உன் வாக்கால் சொன்ன, அம் மூன்றும் உனக்கு வைத்தியமாக வேண்டும்.

நித்தியா:— புரியவில்லையே பாபா! சற்று புரியும்படி, சொல்லுங்கள் பார்ப்போம்?




ஸ்ரீபகவானவன் (25)
அநேக வேஷமிட்டு
நடிக்கிறான்:—
எல்லாம் அவனே! எல்லாம்
அவன் பொருளே! எல்லாம்
அவன் செயல்களே! வைத்தியம்
தற்சமயம் இவ்விடத்தில்
மட்டும் மனித இனங்களை
மட்டும் எடுத்துக்கொள்வோம்.
விதி! மனம்! வினை! இம்மூன்றும் அவன் கருவிகள்.
,, ,, ,, ஓர் மனிதனின் தோற்றம்! இருப்பு! இயக்கம் ஆகும்.
தொடரும்.

வைத்தியம்:— இதை சிரத்தையுடன் கவனி!
(A) மனக்கண்கள்! குருடாக வேண்டும்.
அதாவது, நாமரூப, ஜக ஜீவ, சொந்த
பந்த, பாச, பற்றின், விகார தோற்றம்!
நாசமாக வேண்டும்.
அறிவுக் கண்! பிரகாசிக்க வேண்டும்.
அதாவது, எல்லாம், ஸ்ரீபகவானின், உடமை
யாகவும்! எல்லாம் ,, செயல்
ஆகவும்! அனைத்தாயும், அவன் வேஷமிட்டு,
அந்தந்த பாத்திர வினைக்கேற்றபடி, அவனே
விதி தேவதை, இருந்து கொண்டு நடிக்கிறான்
என அறிவுக் கண்ணால் காண வேண்டும்.
(B) மனக்காதுகள் செவிடாக வேண்டும்.
அதாவது, நாமரூப, ஜக ஜீவ, சொந்த பந்த,
பாச பற்றின், வார்த்தைகளை, நன்மை தீமைகளை



விதி! மனம்! வினை! (26)
இவைகளே முறையே
ஆட்டுபவன்! கயிறு! பம்பரம்!
என பொருள் கொள்ளலாம்.
மூன்றில் ஒன்று இல்லையாயி
னும் இயக்கம் இல்லை.
இங்கு விதி என்பது காலத்தை
குறிக்கும். அது பஞ்சபூதங்களாகும்.
இவ்வியக்கத்தின் முக்கிய ஸ்தானம் பெறுவது மனம்
அதுவும் காரணம்: இம்மனமே மாயையின் வசத்தன்மை
உடையதும்

பிரித்தறிய முடியாமல், செவிடாக வேண்டும்.
அறிவின் ஒலி! ஸ்பஷ்டமாக வேண்டும்.
அதாவது, லௌகீக வார்த்தைகளை, காரசாரமாக கேட்டு உணராமல், அதாவது,
ஒலி அலைகள், மோதுகின்றன! என்ற நிலையும்.
நமக்கு மனப் பரிட்சை! நடக்கிறது என்ற
நிலையில், வார்த்தைகளை, மாற்றிப் பார்த்து
கேட்டு, விகார விவகாரம் இல்லாமல், ஆனந்தம்
அடைவது, அறிவின் ஒலியாகும். இதுவே,
காது செவிடாகும் நிலையாகும்.
மௌன வாக்கு அடங்கி அழிய வேண்டும்.
பேச்சு குறைய வேண்டும். கடும்! சுடும்! கபட!
வாக்கு கேலி கிண்டல் வாக்கு கெட வேண்டும்.
மாறாத சத்திய வாக்கு! பிரகாசிக்க வேண்டும்.



மாயவை மட்டும் (27)
ஸ்ரீபகவானின் நினைவு
என்றும்; " மறவாமலிருந்து
கொள்ள வேண்டும். ஓர்
தோற்றத்தை காட்டுவது
மாயா ஆகும். அத் தோற்ற
த்தை பலபல நாம ரூபங்கள்
என ஆக்குவதும் அழிப்பதுவும்;
நான்! எனது! எனதுடைமை உரிமை கொண்டாடுவதும்
இவற்றை தேடிக் கொள்வதும் மனம் ஆகும்.
நாடகம்.

அதாவது:- உன் கண்களும்! காதுகளும்!
நீ கண்டும்! கேட்டும்! பயிரிடும், **விளை**
நிலங்கள் ஆகும் (விவசாய பூமியாகும்)
உன் வாக்கே நீ விதைக்கும் **விதை** ஆகும்.
அதன் பலன் புண்ணிய பாபமும்; ஜனனமரணமும்
ஆகும். ஆகவே, தீயதாகப் பார்க்காமலும்,
தீயதாகக் கேட்காமலும் இருந்தால், அங்கே
உன் விவசாயம், பயன் உள்ளதாக இருக்கும்.
அவ்விரண்டையும், தூயதாக வைத்துக் கொ
ள்ள, இறை குரு! நாமமாவே உறுது\ணை
யாகும். ஆகவே, வாக்கை காப்பாற்றுவாயாக.
இந்நிலையிலே, இம்மூன்றும், செம்மையாக
பயன்படுத்துதவே, கண் இருந்தும் குருடாய்!
காது இருந்தும் செவிடாய்! வாய் இருந்தும்
ஊமையாய்! நீ பக்குவப்பட்ட நிலையாகும்.
இது பற்றி வேறு ஏதாவது, விளக்கம் தேவையா?
கவனமாக கேள்?



வினைகளை ஒழுங்காக பார்த்து நடத்துவது மனம் ஆகும். அம்மனதை திட்டமிட்டு காலம் தாழ்த்தாது நடத்துவது விதி என்ற கால தேவதை. மேலே கூறிய இம்மூன்றின் உள்ளும் ஆன்மா என்ற சைதன்யமாக இருப்பது ஸ்ரீபகவான் ஆகும். மேலே கூறிய அம்மூன்றும் செயல் கருவிகளே. ஆகவே அவை மூன்றும் பொம்மைகள் கருவில் பொதுவம். உள்ளே உள்ள ஸ்ரீபகவான் (சைதன்யம்) ஒன்றாயும் பூரணப்படாமல் இருக்கின்றான். பக்கத்தில் பார்க்கவும்

நித்தியா :— அறிவின் சிகரமே! பணிவின் பாதையே! கருணையின் வடிவே! ஹே பாமா!

(1) நம் எல்லோரிலும், உள்ளே மறைபொருளாக இருப்பவனை, உணர விடாமல் தடுப்பது எது?

(2) வினையும் மனமும் எப்படி பின்னலிடுகிறது?

(3) ஸ்ரீபகவானிடம், மாயா செயல்படும் விதமென்ன? நம்மிடம், மனம் செயல்படும் விதமென்ன?

(4) நாமரூபத்தை, உண்டுபண்ணியது, மாயாவா? மனமா?


(5) ஓர் ஞானியிடம், மாயா பயனற்றுப் போகும் விதம் என்ன?

(6) (A) ஓர் ஞானி, ஸ்ரீபகவானின் துணையுடன், ஆத்ம ஞான பாடம் நடத்துவது எதற்காக?

(B) ஸ்ரீபகவான் துணை இல்லாமல் பாடம் நடத்த முடியாதா?

(C) கனிந்த ஞானத்திற்கும்! வறட்சி ஞானத்திற்கும் அனுபவம் என்ன? வேற்றுமை என்ன?

இவைகளுக்கு, விடை சொன்னால் போதும்பாமா?



அனைத்துள்ளும்; 29
அனைவருள்ளும்;
அந்தர்யாமியாக
இருந்து கொண்டு அவ
ரவர் வினையின்
நிலை கொண்டு; மாயாவின்
மகனை மனதை வைத்துக்
கொண்டு அனுப்பிச காமல்
தொடரும்.

பைத்தியம் :- கொழுந்தே! நல்லபயன் உள்ள கேள்விகளையே, கேட்டிருக்கிறாய்! இது நம் குழந்தைகள், அனைவர்க்கும் தேவை தான். இனி கவனமாக கேள்.

கேள்வி :-

(1) நம் எல்லோரிலும், உள்ளே மறை பொருளாக, இருப்பவனை, உணர வொட்டாமல், தடுப்பது எது?

பதில் :- புறத்தோற்றமாகிய, நாம ரூப மயக்கம் ஆகும். காரணம் :- காண்பதும்! கேட்பதும்! சுவைப்பதும்! தொடுவதும்! ஆகிய இந்த, புறக்காட்சியில் தான், மனம் நிலை பெற காரணம் இவ்வ சுவையின் போதை மேயன்றி உள்ளே செல்வாது. செல்ல இயலாது.

அப்படியும், உள்ளே சென்று விட்டால், இம் மனமே! அறிவாகி விடும். மனமயக்கம் இருந்தால் தான், லௌகீக குண தோஷ விளையாட்டை விளையாடி, வெல்! சேர்க்க முடியும்.




உ வரவு செலவுகளை அனுபவமாக செய்யும் நம் தந்தையாகிய ஸ்ரீபகவானை உள் இருப்பை உணராமல் வெளித்தோற்ற நாமரூபங்களின் பிரேமையின் மயக்கத்தில் உடைமை உரிமை கொண்டாடி அவனை மறந்து விட்டோம் முடிந்தது.

விளையாட்டும்! வினையும்! இல்லை யென்றால், இவ்வுலகம் இராது. இவ்வுலகம் தேவை இல்லையென்றாகிவிடும். ஆகவே அறிவுடையோன் ஆனந்தத்தையே விரும்புவான்! அமைதியையே விரும்புவான்! விளையாட்டையும், வினையையும், விரும்பான். இங்கு மனச் சாட்சியும்! அறிவும் ஒன்றே. அறிவுடையோர், நாமரூப உலகை, வெறுக்கார். மற்றவர்கள் விளையாட்டும் என, ஒதுங்கி வழிவிட்டு, விலகிக் கொள்வர். அதே போல், அறிவு சொரூபமாக இருக்கும், ஸ்ரீபகவானும்! மண! விளையாட்டு, விளையாடும் குழந்தைகளை, தடுக்கமாட்டான். அப்படி தடுத்தால், அவன் கருணை இல்லாதவன்! என்றாகிவிடும். அங்கு ஸ்ரீபகவான்! (அறிவு) விளையாட்டு போதும் என, நிறைவுள்ளவர்களை மட்டும், ஏற்றுக்கொள்கிறான். மற்றவர்களை விட்டுவிடுகிறான். இதுவே தர்மம்.

## நித்தியாவின் கேள்வியும் ஓர் பைத்தியத்தின் பதிலும்






(௧) நீ உன் மனதை வைத்து விளையாடிய நிலையாவது:- ஒரு வயதில் இருந்து பத்து வயது வரை உன் மனம் உன் வசம் தான் இருந்தது. பின் உன் ஜகவாஸ தோஷ பழக்க வழக்க நினைவில் அம்மனம் ஆசையை காட்டி மோசம் செய்து உன்னை பற்றிக் கொண்டு ஆட்டுகிறது.

(௨) கேள்வி:- வினையும் மனமும் எப்படி பின்னவிடுகிறது?

பதில்:- வினையும் மனமும்! தேவையும் & ஆசையும்! எப்படி பின்ன விட்டு, பிரிக்க முடியாமல், சிரமத்தை, உண்டு பண்ணுகிறதோ, அவ்வாறு பின்னவிடும். இதை உற்றுணர்ந்து நோக்கினால்:- **மனம்**! என்றால், நாமரூப தோற்ற மயக்கம் ஆகும். **வினை**! என்றால், அந்த நாமரூபங்களை நான் எனது! என்ற நிலையில், உடைமை & உரிமை! கொண்டாடி, பிணைக்கும், புண்ணிய பாபம் ஆகும்.

எல்லாம் ஸ்ரீ பகவான் பொருளாக பார்ப்பதும்!
" " செயலாக உணர்வதும்!!
ஸத்திய அனுபவமானால், அங்கு தோஷ குணங்கள் இல்லாமையினால், சாந்தி! அமைதியின் நிலையில், மனமே அறிவாகி விடும்.



அம்மனம் உன்னை பற்றிக்கொண்டதால் (32)

மோஹா வேசத்திலும்

கோபாவேசத்திலும்

ஆளாகி அல்லல் படுவதும்

மனமேயன்றோ நீயல்லவ!

எப்பதே ஸத்தியம். ஒன்றுவேயே அம்மனதை அபிரந்த சர்வார்ப்பணைத் ஸ்ரீகுருவிடம் (மாயாவிடம்) அனுப்பமுடியும். இவ்வம்சயம் முடிந்தது.

மனம், அறிவானால், தோஷ குணங்கள் இல்லாமையினால், புண்ணிய பாப வினைகள் கெட்டு நாசமாகி, நைஷ்கர்மமாகிய, ஸத்திய தர்மம்! மேலோங்கும். இதனால், பஞ்சு போன்று மனமும், பாரம் இல்லாமல், ஆகிவிடும். மனோபாரம் இல்லாமையினால், வினை பாரம் குறைந்து தாவசிரமம் நாசமாகும். அதனால், ஸ்ரீ ஸத்குருவின் பிரம்மார்ப்பணை! ஜீவன் முக்தி வழிசமானம், ஸ்வய அனுபவமாகி,

③ கேள்வி :— ஸ்ரீபகவானிடம்! மாயா செயல்படும், விதம் என்ன? நம்மிடம் மனம் செயல்படும், விதம் என்ன?

பதில் :— மாயாவின் மகனே மனம் என்பது, அனைவரும் அறிந்ததே. இதில் மாயா என்றால், ஓர் தோற்றத்தை மட்டும், உண்டுபண்ணும்.



33

மண்! கல்!
மரம்! ஜலம்!
இவையெல்லாம்
ஓர் தோற்றமட்டும்
உடையதாகும். அதை
நாமரூபம் என சொல்ல
முடியாது. சொல்ல இயலாது. காரணம்?
தொடரும்.

மனம் என்றால், அத் தோற்றத்தை, தம் புசிப்புக்கு ஏற்றவாறு, அதாவது தம் அனுபவ பழக்கத்திற்கு, ஏற்றவாறு, ஓர் உருவத்தை உண்டுபண்ணி, அதை இன்னது என்ற ஓர் பெயரையும் கொடுத்து, அதை உடைமைக்கு உரிமை! பாராட்டி, மயங்குவது மனமாகும்.

மேலே சொன்ன நிலையில், ஸ்ரீபகவானை வன்! நம் மாயாவை வைத்து **தோற்றத்தை** மட்டும் உண்டாக்கினான். ஸ்ரீபகவானின் அம்சமான நம்மை அடைத்து இந்த தோற்றத்தை எம் மாயாவின் மகனை மனதை **உன்** வசம் வைத்துக் கொண்டு விளையாடு என்று தான் ஸ்ரீபகவான் கொடுத்தான். அப்படி தான் சிவகாமம், அம்மனதை உன் வசம் வைத்துத் தான், விளையாடினாய். ஆனால் உன் மனதின்



இ அவை இயக்கமும் அதன் குணமும் அற்றதாகும். 34

அவைகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்து இருந்தால் இயக்கமும், குணமும் பெறும்.

அவற்றை நாமரூபம் என சொன்னால் பொருந்தும்.


ஆ முடிந்தது.

சகவாஸ தோஷப்பக்க வழக்கத்தினால், அம்மனம், உன்னைப் பற்றிக் கொண்டது. அதாவது, அறிவை உன்மனம், மூடிக் கொண்டது. அறிவு செயல்படாத தன்மையினால், மா போன போக்கில், போய்க் கொண்டிருக்கிறோம். ம் ஆகவே அம்மனம் உன்னை, அறிவை மூடியதால் அடிமைப்படுத்தி விட்டது, எனமட்டும் உணர்.

நீ அறிவு தோஷ குணங்களுக்கு, ஆனானது, மாயா வின் ஸ்ரீபகவானின் குற்றம் இல்லை.

பழக்க, வழக்க, தோஷ, மனதின் குற்றமே! சர்வார்ப்பணத்தில்! மனம் நிலைத்து நின்றால் போதும். ஸ்வய அனுபவம் தானே பெருகும்.

## நித்தியாவின் கேள்வியும் ஓர் பைத்தியத்தின் பதிலும்




அறிவே ஆன்மா! (35)
ஆன்மாவே அறிவு!
ஆனால் இந்த ஆன்மா
மாயாவோடு சம்ப
ந்தம் கொண்டால் அது
ஸ்ரீபகவான் ஆகும்.
அதே ஆன்மா மனதால்
மூடப்பட்டால் அது
மனிதன் என்ற ஜீவாத்மாவாக மாறிவிடும்.

குறிப்பு:- ஸ்ரீபகவானின் மாயா! தொலிவு
இவ்வாறு, தோற்றத்தை மட்டும், உண்டாக்குகிறது
மாயாமனமானது, அத்தோற்றத்தை, பலபல,
நாமரூபங்களாக்கி, உரிமை உடைமையென,
போராடி போராடி, துன்பத்தை உண்டுபண்ணுகிறது

(4) கேள்வி:- நாமரூபத்தை உண்டுபண்ணியது
மாயாவா? மனமா?

பதில்:- ஓர் தோற்றத்தைமட்டும், உண்டு
பண்ணியது மாயாவாகும்.
அத்தோற்றத்தை, தம் சுய தேவையின்!
கற்பனையை உண்டுபண்ணி, அக்கற்பனையின்படி,
நாமரூபம்! கொடுத்தது மனமாகும்.

உதாரணம்:- கல்! மண்! மரம்! ஜலம்! என
ஓர் தோற்றத்தைமட்டும், உண்டுபண்ணியது
மாயாவாகும்.



ஒன்றுடன் ஒன்று (36)
இணைவதால்
பெறும் நாம ரூபம்
எதுவானாலும் அவை
மண்ணே என்றும்;
மண்ணுக்கு அன்னியமாய்
எதுவும் இல்லையென்ற உணர்வு பெற்று
விட்டால் அதுவே அத்வைத ஞானம் ஆகும்.

தம் சுய தேவைக்காக, முறையே அவைகள்,
வீடுகள் என்றும்; பாத்திர பாண்டங்கள்
என்றும்; மேஜை நாற்காலி பீரோ என்ற,
உபயோக பொருள்கள் என்றும்; மற்றும்,
**தேவை & ஆசை** என்ற நியதியால்,
ஜவந்தை! அனைத்திற்கும், ஆதாரமாக
வைத்துக்கொண்டு, அவைகள் உடைமை & உரிமை!
என்ற நியதியால், பற்றை வைத்துக் கொண்டு,
அல்லல் படுவது மனமாகும்.
மாயா என்றால் ஒரு தோற்றமும், அதன் பெயரும்.
மனம் என்றால், பாவ தோற்றமும், அதன்
விதவித, நாமரூபங்களை, உணர்ந்தால் போதும்.



ஜீவ கர்த்தத்துவத்தையும், ஈச கர்த்தத்துவத்தையும், முறையே நான் என்பதை விட்ட நிலையிலும் ஈசமயிகம் அற்று; அவிவேசனை நாம்

தொடரும்

கேள்வி :— ஓர் ஞானியிடம் மாயா மயங்கும் போகும் விதம் என்ன?

பதில் :— ஓர் ஞானி என்றால், பிரவர்த்தியை விட்டவனே ஞானி!

ஓர் ஞானி என்றால், நிவர்த்தியில் அனுஷ்டிக்கப்பட்டவனே ஞானி!

பிரவர்த்தியில், மனதின் செயல்பாடு உண்டு.

நிவர்த்தியில், அறிவின் ஸ்திரத்தன்மை உண்டு.

அறிவில் நிலைத்திருக்கும் ஞானி, இருப்பில் ஸ்ரீபகவானாகவே! ஆகி விடுகிறான்.

ஆகவே மாயா! அவனுள் அடங்கிவிடும். இதன் முக்கியம் என்னவென்றால்?



நாமே அவன்
என்றிட ஓம்
உணர்வு பெற்று!
பிரவர்த்தியை!
துறந்து! நிவர்த்தியை
ஏற்றுக் கொண்டவனிடம்
ஸ்ரீபகவானின் மாயா பயம் அற்றுப் போகும்
என ஸ்ரீமத் ஞானிகளின் வாயிலாக அறிகிறோம்
முடிந்தவும்.

இந்த ஞானியிடம், பிரவர்த்தி இல்லாத
தன்மையினால், ஜீவ கர்த்தத்துவம்! ஒழிந்து
நாசமாகி விடுகிறது. அதே, இவனிடம்,
இயல்பாக இருப்பது, ஈச கர்த்தத்துவமே.
பிரவர்த்தியே, தேவை இல்லையென,
ஜீவன் முக்தியை! நோக்கிச் செல்லும்
இவனுக்கு, அந்த ஈச கர்த்தத்துவமும்! தேவையில்லை.
அந்த ஈசகர்த்தத்துவ பதவியில், செயல்பட
ஹரி கர்த்தாக்களுக்கும்! அவர்கள் நிழலாகிய,
போக மாயாவுக்கும்! பரஅம்பமே அவர்களுக்கு
அம்பணியை கொடுத்திருப்பதால், அந்த
பணியும் வேஷயும், இவனுக்கு தேவையில்லை.



மாயா செல்வத் (39) நாசாகிவிடும் என்றும் அதன் பொருள் (1) உலகமும் / பொருள்களும் / தோன்றும். ஆனால் பொம்மலாட்டமாக தோன்றும்

(2) உறவு, சுற்றம், நட்பு, முதலிய எல்லாம் கொடுக்கல் வாங்கல்! போக்கு வரவு! தொடர்பு

ஆகவே, ஜீவன் முக்தியை அடையும் ஞானிக்கு, லௌகீக பிரவர்த்தியும்! நைஷ்டிக பிரவர்த்தியும்! தேவை இல்லை என்று, சொல்வதை விட,


**இல்லை** என்றே, பிரமாணமாகச் சொல்வோம்.

ஜீவன் முக்தியை, நாடிச் செல்லும், ஆன்ம சாதகர்களுக்கு மட்டும். ஒரே ஒரு கேள்வியை கேட்கிறோம் :— குழந்தைகளாகிய சாதுக்களே! சந்நியாசிகளே!

நாமுமே, உலகம் பொய். அது வேண்டாம்

**துறவறமே** எங்கள் **லட்சியம்**!


என, உலக சொந்த பந்த, ஆசைகள் எல்லாம்



விகார காட்சியும்!
விவகார பிரச்சனை (40)
களும் இல்லாமல்
அதாவது இன்பதுன்பம்
தோன்றாமல் ஆனந்தம்
ஒன்றே தோன்றும்.
அங்கு மாயாவின் எந்த
மயக்கமும் மனதின் எந்த
ஆட்டத்தின் அசைவுகளும் சஞ்சலங்களும்
தோன்றாது. முடிந்தது.

துறந்த நீங்கள்! பொது நலத் தொண்டு!
எனச் சொல்லும், பிரவர்த்தியில்!
மயங்கி! சிக்கி! தவிப்பது ஏன்? ஏன்? ஏன்?
அந்த பொது நலத் தொண்டை, செய்வதற்கே,
அதற்கென, கர்மா சம்பந்தம் கொண்ட,
செல்வந்தர்களையும், அரசாங்கத்தையும்,
ஸ்ரீபகவான் நியமித்து அம்மணியை குறைவில்
லாமல், நிறைவுற செய்து வருகிறனே! அந்த
பிழைப்பு, உங்களுக்கு தேவையா? அனைத்தையும்
துறந்த நீங்கள்! பாடம்! பட்டம்! பதவி!
பணம்! பேர்! புகழ்! என்ற பிரவர்த்தியில்,
மயங்கினால், உங்கள் துறவின் வைராக்கியம் என்னவது?
நீங்கள் துறவின் நிலையில் ஞானியானால், ஸ்ரீபகவானின்!
மாயா உன்னிடம், ஒரு செல்லாக் காசாகிவிடும்
என்பது சத்தியமே!

## நித்தியாவின் கேள்வியும் ஓர் பைத்தியத்தின் பதிலும்



இன்றைய வேத (41)
சாஸ்திர
பாடம் எப்படி இருக்கிறது
என்றால் :- வேத! வேதா
ந்தங்களை! எப்படி
ஸ்ரீமஹான்களின் நூல்
களிலிருந்து படித்தார்களோ
அப்படியே மொழி பெயர்த்தும்
இக்கலியுகத்திற்கு ஏற்றவாறு புதிய புதிய
நாதர்த்த வார்த்தைகளை பயன்படுத்தியும் தொடரும்

ஸ்ரீபகவானின் மாயா! செல்வாக்கு காசாகிவிடும் :-
மாயா என்றால், ஓர் தோற்றத்தை மட்டும் உண்டுபண்ணும்
உதாரணம் :— கல்! மண்! ஜலம்! தாவரங்கள்!
இவைகள் இருப்பை மட்டும் (தோற்றம் மட்டும்)
உடையதாகும். அத்தோற்றத்திற்கு பந்தம் இல்லாத நாமா உண்டு.
மனம் என்றால், அத் தோற்றங்களை, ஒன்றுடன் ஒன்றை
பிணைத்து இணைத்து, நாமரூபம்! கொடுப்பது மனமாகும்.
இங்கு நாம் மனவசப்படாமல், அம்மனதையே,
அறிவாக்கிவிட்டால், புரியவில்லையா?
ஸர்வஜீவ வர்க்கங்களும் (மனிதன் உட்பட)
நம்மவர்களே! என்றும், எல்லாம் நம்முடையதே!
என்ற நிலையில், **பேதம்**! கலைந்து விட்டால்,
அங்கு விபரீத மனமும்! விகார தோற்றமும்! இல்லாத்
தன்மையினால், **மனம்**! மாயாவில், ஒடுங்கிவிடும்.
மாயா **நம்மள்**! ஒடுங்கி விடும். ஆகவே அங்கு,
மாயா, செல்வாக்கு காசாகிவிடும் என்பது வேதியலே



அவர் அதை சொன்னார். (42)
இவர் இதை சொன்னார்.
என அவர்கள் சொன்னதை
தான் இவர்கள் சொல்கி
றார்களேயன்றி, இவர்கள்
அப்படி நடந்து அனுபவம்
பெறவில்லை. இவர்கள்
அனுபவம் பெறாத தன்மையால்
கேட்பவர்களும் அனுபவம்
பெற்று போவதும் இல்லை.
பெறுவதும் இல்லை.
உனக்குத்தான் உபதேசம். உனக்கில்லை!

தொடரும்


(6)

(A) கேள்வி:- ஓர் ஞானி! ஸ்ரீ பகவானின் துணையுடன், ஆத்ம ஞான பாடம் நடத்துவது எதற்காக?

(B) ஸ்ரீ பகவான் துணை இல்லாமல், பாடம் நடத்த முடியாதா?

(C) கனிந்த ஞானத்திற்கும், வறட்சி ஞானத்திற்கும், வேற்றுமை என்ன? அனுபவம் என்ன?

(A) பதில்:- குழந்தைகளே! மற்றைய மூன்று யுகங்களிலும், ஸ்ரீ பகவனோடேயே, **நாம்!** இருந்தோம். அப்போது, மனோ வலிமை இல்லாமல், நாம் அறிவாகவே இருந்தோம். அது சமயம், கலி **தோஷமும்!** இல்லை. மனோ **வலிமையும்!** இல்லாதிருந்தது. ஆகவே அன்று, நாம் நாம ரூப புத்தியால், நான் & எனது! இல்லாதிருந்தோம். ஆகவே **வல்**வினை நம்மை பற்றவில்லை. **நல்**வினையே! நம்மை சூழ்ந்திருந்தது.



எறும்பைப் போல் அமைந்து விட்டது. (43)
அதனால் அவர்கள்
அனுபவம் எப்படி இருக்கிறது
என்றால் (A) குருதேவரையும்
அவர் வாக்கையும்
பரீட்சித்தல்! (B) அடங்காமை
அடக்கி ஆளுதல் (C) வாதம்
குதர்க்கம் பண்ணி தம் வித்வத்தை
வெளிப்படுத்தி தம்பாண்டித்யத்தை காட்டுதல்
தொடரும்.

**அன்று :-** ஆடம்பரம் இல்லை. அணிகலன் இல்லை
சேமிப்பு இல்லை. நவமணிகள்! பொன்! பணம்! இல்லை.
(தோஷ) கொடுக்கல் வாங்கல் இல்லை. போக்கு வரவு இல்லை.
இவை அனைத்திற்கும் மேலாக, சொந்தம்!
பந்தம்! பாசம்! பற்று! என்ற பிணைப்பு இணைப்பு!
இல்லவே இல்லை.

**இன்று :-** மேலே சொல்லிய அனைத்தும்,
இல்லாமல் நமக்கு **வாழ்வு** இல்லையென்றாகி
விட்டது. வாழத்தான் பிரியப் படுகிறோமே யன்றி,
சாதனை செய்ய, எவரும் விரும்புவதில்லை.
வாழ்வால், ஜனன மரணத்தை ஏற்கலாம்.
சாதனையால் ,, ஜயிக்கலாம்.
இப்போது நாம் இருப்பதும் இயங்குவதும்
**கலி** யுகத்தின் **கடைசி** கட்டமாகும்.



எவரிடமும் வணங்காமை! அப்படி வணங்கினால் நம் சக்தி போய் விடும்! என்ற பய முறுத்தல்கள்!

44

D பொறுமை! பணிவு! விட்டுக் கொடுத்தல்! சகித்தல்! கனிவு! அடக்கம்! எல்லாம் அவர்களின் இயலாத்தன்மை அவர்கள் பாமரர்! நாம் படித்தவர்கள் என்ற மேகம் தொடரும்

நாம் தெரிந்தும், தெரியாமலும், கலி தோஷ **குண, மனதுடன்!** நாம ரூப ஜகத்தை புகுந்தும் விட்டோம்! புகுந்துக் கொண்டும் இருக்கிறோம். அக்கினியை, தெரிந்து தொட்டாலும், தெரியாமல் தொட்டாலும், சுடத்தானே செய்யும்? அப்படித்தான், நாம ரூப, ஜக ஜீவ, தோற்றம் அனைத்தும், நம் கலி தோஷ, குண மன, பிணைப்பால் **விஷ** என்ற விஷம்! ஏறிக் கொண்டே இருக்கிறது. பலாப்பழம் அறுக்கும் ஒருவன், கையில் எண்ணை தடவிக் கொண்டு, அப்பசையினின்று நீங்கிக் கொள்வது போன்று, ஓர் ஞானி/ஸ்ரீ பகவானின் துணையுடன், தானும் தன்னை நீக்கிக் கொள்வான். அவனை நாடியவர்களையும், ஸ்ரீ பகவன் நாமத்தை கொடுத்து, அவர்களையும் நீக்கிவிடுவான் என, ஸ்ரீ மகான்கள் சொல்வர்.



(E) நம்முடைய
படிப்பு! பட்டம்! (45)
பதவி! அந்தஸ்து! வல்லமை
இவைகளை சுட்டிக்காட்டி
வணங்காமுடியர்களாய்
ஆதலால் ஞானம் இழந்தவர்களாய்

(F) இப்படி பலவித போகங்களை செய்து நான் ஆத்மா
நான் பிரம்மம்! நான் பரப்பிரம்மம்!
தொடரும்

(B) ஓர் ஞானி ஸ்ரீபகவானின், துணை இல்லாமல்,
பாடம் நடத்த முடியாதா?

பதில்:— அவசியம் நடத்த முடியாது. அப்படி
நடத்தினால், அது ஸாஸ்திர/வேத/
வேதாந்த/வாய்/ பாடமாகவே தான்,
இருக்குமேயன்றி, அது அனுபவ/ பாடமாக
இராது! இருக்கமுடியாது!! இருக்க இயலாது!!!
இது முக்காலமும், எக்காலமும் நமக்காகவே
வாழ்ந்து காட்டிய, ஸ்ரீமஹான்களின் அனுபவமாகும்.
இன்றைய, அத்வைத குருமார்கள், ஸ்ரீபகவான்
என்றால், இருப்பு இல்லாதவன் என்றும்; ,,
ஓர் மாயா என்றும், அவனுக்கு முக்கியத்துவம்
கொடுப்பதும் இல்லை. காரணம் இவர்களுக்கு,




இப்படி அஹங்காரம் அதிகாரம்! ஆதிக்கம்! விடமுடியாத நிலையில் இருந்து கொண்டு (46)

உ அனைத்து தேவ தெய்வமும் இல்லை, இல்லை என்ற கிரியும்

நாஸ்திகர்களாய் ஆக்கிவிட்டார்கள். அது குணவில்லாத வறண்ட நிலைமை ஆகிவிட்டது. இது இவர்கள் குற்றமில்லை. கலியுகத்தின் இரும்பு ஆகையால் முடிந்தது.

ஸ்ரீ பகவான் நிலையை எட்ட, தகுதி இல்லை என்றே பிரமாணமாகச் சொல்லுவோம். அதன் காரணமும், இவர்களின் பிரவர்த்தியின், மோஹ வேகமே, காரணமாக அமைந்து விட்டது. இவர்கள் அனுபவம், எப்படி இருக்கிறது என்றால்? ஸ்ரீ பகவான் வேண்டாம். அவன் சிருஷ்டியாகிய போகம் (பணம்! பெண்! பட்டம்! பதவி!) வேண்டும். (என்ற நிலையில்) இல்லாத உலகம் என, மாயாவி மட்டும் சொல்லிக் கொண்டு, அவ்வுலகம் தன்னை அடைய வேண்டும் என்ற, எதிர்பார்ப்பும்! வியாபாரமும்! விளம்பரமும்! உடையவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, இவர்கள் சாதனையும், போதனையும், ஓர் முதலை நம்பி ஆற்றை கடந்தவன், கதையாக முடிகிறது.



பணக்கிட்டவும் அதனை பெறும் (47)
பட்டம் பதவியிலும்
சேவை என்ற
வேஷங்கள்!
பெறும் புகழ்ச்சியின்
பெருமையிலும் சிக்கியவர்கள் தொடரும்.

இதை உணர்.

ஸ்ரீபகவானின், மாயா சிருஷ்டியே, இந்த நாம ரூப,ஜகத ஜீவ, தோற்றம் ஆகும். ஸ்ரீபகவானுடைய என்னுடையது என, புத்தியின் அவலமே, ஜீவ வினை! ஆகும். அப்புசிப்பை, அவனிடமே, எல்லாம் நீயே! என விட்டால் தானே, அச்ஜீவவினை, அழிந்து ஒழியும். அதைவிதாவசிரமமும் படிப் படியாக, அழிந்து நாசமாகும்.

அந்த ஸ்ரீபகவானும், உன்னிடம், வேறு எதையும் கேட்க வில்லையே.

**எம்முடையதை! எம்முடையதாக்கு! மனமே!** பாவனை செய்தால், வினையும் உன்னை தொடாது என்றும். தொடராது என்றும். அங்கு மனைபாரமும், உன்னை தாக்காது ஒழியும் என்று தானே, சொல்கிறேன். இவ்வினையையும்



உ

ஸ்ரீ பகவத் சொரூபத்தை (48)
ஹாஸ்யமாம்!
வியாபாரம்!
ஆடம்பரம்! என
ஆக்கிக் கொண்டார்கள். ஆகவே


இன்றைய **கலியுகம்!** திசைமாறி பாதை தொடரும்

அம்மனையும் **பாரமும் சிரமமும்!**
இல்லாமல் செய்யவும்; இயக்கம் அற்ற அதை!
இயக்கம் உள்ளவனை பற்றிக் கொண்டு, அதாவது
**அவனை!** கொண்டு; **அது!** நாம் என ஆவதற்கு,

அவனைப் பற்றி, பாடம் நடத்தவும் முடியாது.
அனுபவம் பெறவும் முடியாது என்பதே பக்தியம்.

உ கனிந்த ஞானத்திற்கும், வறட்சி ஞானத்திற்கும்,
அனுபவம் என்ன? வேற்றுமை என்ன?

பதில்:- ஆத்ம ஞானத்தின், அடிப்படையே,
பொறுமை! பணிவு! கனிவு! கருணை! அன்பு!
இவைகளின் சாதனை, பேதம் தவிர்த்தால்!
விருப்பு வெறுப்பு நாசமாகும். விருப்பு வெறுப்பு
நாசமானால்; குற்றம் குறை நாசமாகும். ஆக



வியாபார பக்தியாயும்

வேத வேதாந்த

சாஸ்திர பாடமாக

இருக்கிறதே யன்றி

ஆனந்த பக்தியும்

உணர்ந்த அநுபவ ஞானமாகவும்

இல்லாமல் போய்விட்டது. இதுகாலத்தின்
கோலமே. இது என் ... இல்லை. குறைந்தது.

இம் மூன்றையும், முறையோடு தெரிந்து

இப்படி தெரியப்படுத்தி, முன் கூறிய, நியதியால்.

சர்வார்ப்பணம் செய்து | முதலில் **அவனாகி** |

அவன் கருணையால், அவனே **நாமாகி** |


ஸ்ரீ ஸத்குரு கருணையால்/ பிரம்மார்ப்பணம்/ ஸ்வய

அனுபவம் பெறுவதே, **கனிந்த** | ஞானம் ஆகும்.

இப்படி பெறாமல். சாஸ்திரம், வேதம், வேதாந்தம்,
உபநிஷதம், படித்து மனப்பாடம் செய்து, அதையே போதனை

**குருவாக** | இருப்பது **வறட்சி** | ஞானம் ஆகும்.

கனிந்த ஞானத்தில், அனுபவம் ஸ்வயமாக இருக்கும்.
வறட்சி ஞானத்தில், பாபம், பட்டம், பதவி, இவைகள்
விமர்சையாக, ஜே ஜே ஜே ஜே! என ஒரே கொண்
டாட்டமாக இருக்கும். முந்தையதில், கனிவின் வாக்கு
பிந்தையதில் வார்த்தையின் மாயா ஜாலம்.



வாய்ஞானம் என்பது (50)
வேத வேதாந்த
படிப்பறிவால்
பாடம் ஒப்பிக்கும்
பாண்டித்ய ஞானமாக
விளக்கம் தரவும் பெறவும்

**அதுவாக!** விளங்கமுடியாது ஸ்ரீபகவத் ஸாந்நித்யம்.

கனிந்த ஞானத்தினால், ஸ்ரீபகவான் கிருபை பெறமுடியும்.
அவன் கிருபையினால், மாயாவின் மயக்கம் இல்லை.

மனதின் தடுமாற்றம் இல்லை.
முதிர்ச்சி ஞானத்தினால், ஸ்ரீபகவானின்! கருணையை,
பெற்ற தன்மையினால், பட்டம் பதவி! பெண் பணம்!

இவைகளின், போட்டி பொறாமையால் மாட்டவைத்து

பிரவர்த்தி அதிவேகமாக நடைபெறும். அங்கு,
ஆத்மஞானம் வாய் ஞானமாக (சாஸ்திர வேத
வேதாந்த, உபநிஷத், படிப்பறிவின் ஞானமாக)
இருக்கும். அனுபவ ஞான கனிவின் **கனியின்**
ஞானமாக இராது. என்பது, ஸ்ரீமஹான்களின் வாயிலாக
அறிகிறோம். இதுவே ஆத்ம ஞானானுபவத்திற்கும்,
வேற்றுமை என்ற, வாய் ஞானத்திற்கும், விளக்கமாகும்.
நித்தியா:- அனுபவ அறிவின் பாமாவே! உங்கள்
தெளிந்திருப்பது அற்புதம்! வெகு ஆனந்தம்!
இன்னொரு சிறிய கேள்வி? தாங்கள் மடங்களிலும்,
கண்டோம்! நேரடி உரையாடலிலும், கேட்டோம்.
ஸ்ரீமத்பாகவத உபந்நியாசம் செய்யும், ஸ்ரீமஹான்
களிடமும், கேட்டிருக்கிறோம். ஆனாலும் இது,



நித்தியா சொன்னது: எங்கள் குழப்பத்திற்கு காரணம்? எங்கள் (51)
வாக்கு வாதம் தான்.

ஒருவர் சொல்லை ஒருவர் ஏற்பதும்! மதிப்பதும்! இல்லை
தன் சொல்லில் நிலைநாட்டவே
என்னுவோம். இது எங்கள் அகங்கார ஆதிக்கமே
காரணம் என இப்போது உணர்கிறோம்.

எங்களுக்கு, புரியாத புதிராகவே உள்ளது.

காரணம்? இதை அறிவால் தான், உணர முடியுமே
யன்றி, மனதால் உணர முடியாது தான். நாங்கள்,
பலரும், பலர் மூலமாக, விளக்கம் பெற முயல்வோம்.
ஆரம்பத்தில், ஒருவருக்கொருவர், புலம்பி தீர்ப்போம்.

ஒருவனும் அடைய முடியாமல், குழம்பி முடிவுறுவோம்.
அது பற்றி, கேட்கலாமா பாபா?

பைத்தியம்:- இப்போது நீ கேட்ட கேள்வியே,
புலம்பலும் நீ அதனில் மாட்டும் குழப்பமும் தான்.
சரி சரி, வார்த்தைகளை குறை. விஷயத்தை மட்டும்
சொல்? அக் கேள்வியின், சந்தேகம் என்ன?

நித்தியா:- அன்பான! அறிவான! கனிவான!
கருணையே வடிவான பாபாவே! எங்கள் கேள்வி:-
(A) எட்டு பட்ட மகிஷிகளுடனும்! பதினாயிரம்,
மனைவியர்களுடனும்! குடும்பம் நடத்தியதாகவும்

எங்கள் **கண்ணன்** உங்கள் **திருடன்**

கிருஷ்ணன்! நித்திய பிரம்மச்சாரி என்கிறீர்.



ஸிவாம் மண் பொருண்மையே! என்றும்; பிரம்ம மயமே என்று அனுபவம் பெறும் முன் சர்வார்ப்பணம் முழுமையாக ஆர்த்தியாயிருக்க வேண்டும்.

(52)


தொடரும்.

(B) கோபியர்கள் கொடுத்த, குடம் குடமான பால்! தயிர்! வெண்ணெயை! உண்ட, மகாரிஷி ஸ்ரீதுர்வாஸர்! யாம் நித்திய உபவாஸி! என்கிறார். இதன் உண்மை இன்மை என்னமாமா?

வைத்தியம் :- இது நல்ல பயனுள்ள கேள்வியே. அம்மா நித்தியா! பிரம்மச்சர்யம் என்றால் என்ன? உபவாஸம் என்றால் என்ன?

நித்தியா :- பெண் மோஹ போஹத்தை எண்ணாதவனும்! பெண் போஹத்தை பண்ணாதவனும்! பேசாதவனும்! காம மோஹ போஹத்தில், விஷாதவனுமே பிரம்மச் சாரி! என்றும்;

உணவு ஏற்காமல், சிலநாள் இருக்கலாம் என்றும்; ஜலம் ஏற்காமல், ஒருநாள் கூட இருக்க முடியாது என்ற காரணத்தால்;




53

அப்படி பூர்த்தி ஆன நிலையில் தான் மாயா உன்னை மயக்கா திருக்கும். மாயா மயக்கவில்லையானால், தொலைந்தது தானே பெருவினை தொடரும்

குறிப்பிட்ட அளவு| சுத்த ஜலம்| மட்டும், ஏற்றுக் கொண்டு, எந்த உணவும்! ஏற்காமல் இருப்பவனே, உபவாஸி| என்றும், வேத சாஸ்திர நிலையிலும், சிவஞானிகள் வாயிலாகவும், அறிகிறோம் பாபா|

வைத்தியம் :- நல்ல உதாரணம்| நல்ல விளக்கம்| இது சாஸ்திர வேத வேதாந்திகள் விளக்கப் பாடம் ஆகும். ஆனால் அனுபவ ஞானம் அல்ல.

நித்தியா :- அப்படியானால், உங்கள் அனுபவ ஞானத்தின், விளக்கம் என்ன மாமா ஜீ?

வைத்தியம் :- அம்மா கொஞ்சந்தே| நித்தியா| இது சற்று கடினமான பாடமே. இப்பாடமானது, நாம ரூப, உடல், உவகை, உறவு, (பொன் பெண்) பொருள்கள்| ஐஸ்| ஐஸ்|| என தள்ளியவனே இப்படி, இருநிலைகளிலும், அனுபவிக்கமுடியும்.



மாயாதும் (54)

உண்மை இருப்பை காட்டி விட்டால். மனதிற்கு அங்கு கற்பனையின் வேலை இல்லாமல் போய் விடும். கற்பனை இல்லாமல் மனம் அறிவாகவே ஸ்வயமாகவே இருக்கும்.

முடிந்தது.


நித்தியா:— இது எப்படி ஸாத்தியமாகும் மாமா?

வைத்தியம்:— மனம் வசம், அகப்பட்டவர்களுக்கு, இது முடியாது. இது இயலாது. ஆனால், அறிவு சொரூபமாக இருப்பவர்களுக்கு, அந்த பிரம்மச்சரியமும் இந்த உபவாஸமும்! தேவையில்லை. அந்த இரண்டும், அவர்களிடம் இயல்பாகவே, உள்ளது என்றுணர்வாயாக.

(குடும்பிகள்)

நித்தியா:— அப்படியானால், நாங்கள் அனைவரும், உங்கள் குழந்தைகள் தானே மாமா? ஆகவே நாங்கள் அனைவரும், குடும்பிகளாகத் தானே, இருக்கிறோம்? நாங்களும், எங்களை பிரம்மச்சாரிகள் என்றும்; உபவாஸிகள் என்றும் சொன்னால், அது பொருந்துமா? பொருந்தாதா மாமா?

வைத்தியம்:— அவசியம் பொருந்தும் நித்தியா! சந்தேகமே எதிரி! உங்கள் நம்பிக்கையே நண்பன்! அந்த நம்பிக்கையின், ஸ்திரத் தன்மைக்கு,



தன் குலப் பெண்ணிடம்!
சேரும் போது:- (55)
(A) அவயவங்களை கூர்ந்து நோக்காதிருந்தல் வேண்டும்.
(B) காமரஸனையான வார்த்தையாடாமல் இருக்க வேண்டும்
(C) சொந்த பந்த உறவுகளை எண்ணாமலும் பேசாமலும் இருக்க வேண்டும்
(D) அவசரம்! வேகம்! கூடாது.

சில கேள்விகளை மட்டும் கேட்கிறோம்.
அதன் விளக்கத்திலிருந்தே நீங்கள் அனைவரும்
பிரம்மச்சாரியா? நித்திய உபவாஸியா??
என்பதை நீங்களே உணர்வீர்.


## (A) பிரம்மச்சாரி!

வைத்தியம்:- பிரம்மச்சரியம் என்பதால், ஆண்! பெண்! வித்தியாசம் இல்லை இருவரும் அனுஷ்டிக்கலாம்
மனக் கட்டுப்பாடு மட்டும் வேண்டும்.

நித்தியா:- அது தானே இயலாத காரியமாக, இருக்கிறது பாபா!

வைத்தியம்:- அறிவோடு இணைந்தால், இம் மனக்கட்டுப்பாடு, கடினம் இல்லாமல், இயல்பாகவே முடியுமே நித்தியா!

நித்தியா:- இதற்கு முந்தைய மடலில், அறிவுக்கும், மனதிற்கும், தெளிவாக தெளிவாகத்தான், விளக்கம் அளித்தீர்கள். ஆனாலும், அறிவில் நிலைத்திருப்பது, அத்தனை சுலபமாக இல்லையே பாபா!



(E) குலமாதை (56)
தவிர வேறு
எந்த குடிமாதுடனும்
(ஹ்)
கூடக் கூடாது.
(F) உன்னை ஸ்ரீ பகவானின்
குழந்தையாக உணர்.
உன் குலமகளை **மாயா**
என உணர். அப்படியானால் தான் உன்னுடைய
காரியம் ஸ்ரீ பகவானின் காரியமாக முடியும்
நிறைவேறும்.

வைத்தியம்:- சீனிக் கற்கண்டு! கல்லைப் போன்று
கடினமாகத்தான் இருக்கிறது. அதை வாயில்
போட்டவுடன், கல்வாட்டமாக இருக்கிறது என்று,
துப்பி விடுவாயா? கடித்து சுவைத்து விடுவாயா?

நித்தியா:- (பலமாகவே சிரித்து விட்டாள்)
ஹே அன்பான பாபா! கற்கண்டு பல முறை,
பார்த்து, சுவைத்த பொருள். அதை எப்படி
துப்ப முடியும்? அதை சுவைத்து விடுவோம். ஆனால்
மனம்! அறிவு! இவற்றின் தாரகரம், தெரிகிறது.
அவ்விரண்டும், தூலமாக இல்லையே! சூட்சுமமாக
அல்லவோ இருக்கிறது. அதனால் தான் திகைப்பு!
ஒரு மருட்சி உண்டாகி விடுகிறது. இருந்தாலும்
தாங்கள் கருணையினால், மனதை வென்று விடுவோம்
பாபா! இது உறுதி! ஆனாலும் இவ்விரண்டின்
(பிரம்மச்சரியம் ஜ உபவாசம்) விளக்கம்
ரொம்ப ரொம்ப, எளிய முறையிலும், உடனே
புரியும் முறையிலும் தந்து அந்த அனுபவத்தையும்
ஆசியாக அருளுங்கள் பாபா?



(௭) பகல் பொழுது வேண்டாம் (57)
இரவுகாலமே
அதற்குரிய காலம்.
(H) ஹேராம்!
என்ற ஸ்மரணை அவஸ்யம்
இருக்க வேண்டும். (1) அக்காரியம்
முடிந்தவுடன் இருவரும் தனித்தனியே
பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும்.

பைத்தியம்:- நல்லது நித்தியா! நவனம் தேவை.

(1) நான்! என்னை! என்னுடையதை முழுமையாக
விட்ட நிலையே பிரம்மச்சரியம்.
இம்மூன்றும், அணு பிரமாணம் எண்ணம்,
சொல், செயலில்! ஒட்டி இருந்தாலும் நீ ஸம்ஸாரியே!

(2) ஆண்! பெண்! விஷய இன்பத்தை, சுவையோடு
பேசுபவனும்! அதை செவி கொடுத்து கேட்பவனும்
ஸம்ஸாரியாகும்.
இவ்விரண்டிலிருந்தும், தூர விலகி இருப்பவனும்,
அவ்வார்த்தை, செய்கையை கண்டு தூர விலகினாலும்,
அவர்களை கொஞ்சமிடத்து, அன்பாக! பழகி
இறை குரு உணர்வோடு இருப்பவனே பிரம்மச்சாரி.
(3) [illegible]! வசத்தால், அச்சம்பவம்
நிகழும் நிலை ஏற்பட்டாலும் மனம் மட்டும்,
கலங்காமல், பயம் இல்லாமல், நெறி நிலையால்,



(7) அப்பிரார்த்தனை:—

ஹே பரமாத்மா! (58)
போதும் ஐயனே
போதும். இந்த வாழ்
வினை! மனம்! விளை
யாட்டு இது பிறவர்த்த
னை? எம்மை நிவர்
த்தி மார்க்கத்திற்கு
வழிநடத்திச் செல்லும் நீ
இப்பிறவர்த்தியை முடிப்பாயாக
இது உன் கை பதுமையே! நீ ஆட்டுகிறாய் இது
ஆடுகிறது. இனி நிறுத்துவது உன் கடமையே!
என முடிக்கவும்.

இருப்பவனே பிரம்மச்சாரி!

அது சமயம், அவ் வின்பத்தை சுவையின் ரஸனையோடு
இன்பமாய்
அனுபவிப்பவன் ஸம்ஸாரி!

(4) ஆண் பெண்! அங்க அவயவங்களை,

**மோஹ, காம, போகத்துடன்!**

**க......ற்......ப......னை!**

(எண்ணியவர்)

பண்ணி எண்ணியவன் **முழு** ஸம்ஸாரியாகும்.

அப்படிப் பட்ட கற்பனை, உன் மன தடுமாற்றத்தால்
வந்தாலும், இறைக்குரு உணர்வோடு, சற்று
தனித்திருந்து, மனம் நைந்து உருகி கண்ணீர்
விடுபவனே, அப்பாபம் செய்யாத பிரம்மச்சாரியாவான்.

குறிப்பு:- இங்கு நீ விடும் கண்ணீர், அப்பாபங்களை கழுவி,
சுத்தப்படுத்தி விடும். இப்படி பல முறை நீ விடும்



நடந்தவைகளை **மறக்க** வேண்டும். நடந்தவைகளை எண்ணினால் வினை பெருகும்.

நடக்கப் போகும் காரியத்தை வேண்டாம். அப்படி காரியத்தை செய்தால் விதி விளையாடும்.

நடப்பதை நலமாக எண்ணினால் நலம் பெறலாம்.

கண்ணீரானது, பாவ எண்ணத்தையும் பாவ செயலையும் துடைத்து நாசம் செய்து விடும்.


ஓர் முக்கிய ரகசியம்

இப்பூமியும்! அதில் வினையோடும், மனதோடும், போராடும், அனைத்து ஜீவ கோடிகளும் **பிறவு!** (கொடுக்கல் வாங்கல்கள்) ஒழுங்காக பாரபக்ஷ தோஷம் இல்லாமல், விகிதாச்சாரப்படி, கணக்கு முடிக்க வந்தவர்கள்! என்பது பிரமாண உண்மை.

இதில் ஓர் முக்கியம்.

**வினையை!** வைத்து **விதி!** (காவதேவன்) எப்படி எப்படி, விளையாடினாலும், இம் **மனதின் முடிச்சே!** முக்கியமாகும். இம்மனம் இச் ஜீவ கர்த்தத்துவத்தால்! இணைந்து முடிச்சு! பிணைவதாகும்.

அதனால்தான் ரிபு கீதையின் பாடலில், ஓர் இடத்தில், மனதினால் செய்ததுவே செய்ததாகும். மற்றொன்றால் (தாவத்தால்) செய்தது செய்ததாகாது என்றார்.



பிரம்மச்சாரி என்றால்;
யாம் ஸ்ரீ பகவானின் (60)
குழந்தை! என்றும்,
அந்த யாம் ஆத்மா
என்றும்; அந்த
யாம் பரமாத்மா என்றும்;
யாம் பரப்பிரம்மம் என்றும்;
பாவித்து பரநிலையை! எவன்
ஆஸ்ரயித்து
(அனுபவநிலையில்) இருக்கின்றானோ அவனே பிரம்மச்சாரி.

இங்கும், நான்! என்றால்! எனதே! என்ற ஜீவ கர்த்தத்துவம்
ஆகிறது. எல்லாம் நீ! உன்னால்! உனதே! ஈ.சகர்த்தத்துவம் ஆகும்.

நீ எதை கொடுத்தாயோ, அதையே வாங்குகிறாய்.
நீ எதை வாங்கினாயோ, அதையே கொடுக்கிறாய்.
நீ எதை உண்டாயோ, அதுவே உன்னை உண்கிறது.
நீ எதை பாதுகாத்தாயோ அது உன்னை பாதுகாக்கிறது.

இதுவே விதி! இதுவே நியதி!

வினை & விதியை காட்டி, உன்னை தடுமாற வைத்து,
வீழ்ச்சி அடையச் செய்வது, உன் மனமே!

ஆகவே, மனம் தடுமாறாமல் இருந்தால், வினையும் இல்லை
விதிக்கு வேலையும் இல்லை. இம் மனதை வசப்
படுத்துவது, இக் கலியில், ஸ்ரீ பகவன் நாமாவே.
மற்றும், யோக தியான மந்திரங்களில், பயன் இல்லை.
இதனால், உறுதியாகவும்! இறுதியாகவும்! சொல்வது
என்னவென்றால்?



கருவி கரணங்கள்! செய்கின்றன:- (61)
நாம் ஸ்ரீ பகவானின்
குழந்தை என்று உறுதி
அல்லது நாம் ஆத்மா
என்று திட உறுதி
நிச்சயமாக; சாஸ்வதமாக; இயல்பாக; ஆகிவிட்டால்; நான் செய்கிறேன்! நானே பொறுப்பு!

முன் சொன்ன, நான்கு நிலைகளிலும் உன் மனம்!
கவனமாக இருந்தால், நீ நித்திய பிரம்மச்சாரியே.

கண்! போன போக்கிலே மனம்! போகலாமா?
காது! கேட்ட நிலையிலே மனம்! போகலாமா?
மனம்! போன போக்கிலே புலன்கள்!
ஓட்டைகள்! இயங்கலாமா?
கவனம் தேவை!

ஓர் மகான் சொன்ன
வாக்கை மறந்து போகலாமா
????????????????



உ

என்னால் முடிந்தது! (62)

நான் புண்ணியம் செய்தேன். நான்! பாவம் செய்கிறேன்! பாவம் செய்தேன்! என்ற ஜீவகர்த்தத்துவம் அழிந்து நாசமாகிவிடும். ஜீவகர்த்தத்துவம் அழிந்து நாசமானால் நீ நித்திய பிரம்மச்சாரியே.

கண்கள் திறந்தாலும், மூடினாலும்! காதுகள் கேட்டாலும், மறந்தாலும்! உண்டாலும்! உறங்கினாலும்! நின்றாலும்! நடந்தாலும்! கிடந்தாலும்! சென்றாலும், வந்தாலும்! கொடுத்தாலும், வாங்கினாலும்! எந்த நிகழ்ச்சிகளும்! அங்கு

**நான்! என்னால்! எனது! இல்லை! கருவிகரணங்கள்!** செய்கின்றன.

என்ற உறுதியில், நிலை குலையாதிருப்பவனே, திடப்பிரக்ஞன். அவனே பிரம்மச்சாரி!

இந்நிலையிலே, எம் குருநாதன் என் ஐயன் ஸ்ரீ கிருஷ்ணன்! இருந்து கொண்டே அந்த ஸத்திய வாசகத்தை புகன்றான். எனை உனையும் இந்த உறுதி நிலையை, நீங்கள் அனைவரும், பெற்றிருக்கிறீர்கள் என்று, யாம் **உறுதியாக** நம்புகிறோம் இது ஸத்தியம். எம் நம்பிக்கை ஸத்தியமே. - மேலும் 4வது பாடலின் விளக்கம் காண்க.

(63)

அங்கங்களை நோக்காதே. அவை! எவை! என உள் ஆழ்ந்து உணர்க. அவை அனைத்தும், **நாமரூப** ஜத திருஷ்டியன், ஆதாரம்! ஆகாரம்! ஆதரவு! என உணர்ந்து களங்கங்களை நீக்குக.



குடும்பியாக வாழும் ஆணும்/பெண்ணும்/ இதில் கண்டபடி நடந்தால் அவர்தான் பிரம்மச்சாரிகளே! இது ஸத்தியம்.

ரிபு கீதையில் **44** வது பாடல், உற்றுணர்ந்து நோக்கிறவ், ஓர் ஸம்ஸாரியானவன் (ஆண்/பெண்) எப்படி நடந்தால், பிரம்மச்சாரியாவான் என்பதை உணரலாம்.

அப்பாடலில், முதல் வரியை, கூர்ந்து கவனிக்கவும்.

# நற்பிரம்ம, விவேக, வலிமை, உள்ள, அதி தீரர்!!!!!!! என்றார்.

இங்கு ஆணும்! பெண்ணும்! இருபாலரையும் சாரும். அவ்விருவரும், தங்கள் **லிங்க**! சம்பந்த வேண்டும் விஷய போகத்தை, எப்படி அனுபவிக்க என்றால்? **பலபல**! சரீர/அவயவ ஸ்பரிசங்களையும்; **கருவி, காரணங்கள்** அதனதன் வினைக்கேற்றவாறு, அதனதன் காரியங்களை, ஒழுங்காக செய்கின்றன என்றும்;

64





உன் எண்ணமே **பாபம்! பாதகம்!! பலிக்கும்!!!**

இறை ஓர் குரு! உணர்வு இருந்தால் (சர்வார்ப்பணமாக பரிபூரணமாக இருந்தால்) காங்கமான, எண்ணம் வராது. சந்தேக பயம் தோன்றாது.

பிரம்மமாகிய, **அது!** இயங்காத தன்மையிலே, அதன் அம்ச **ஸ்ரீபகவான்! தம் மாயையை!** வைத்து, எடுக்கல்! கொடுக்கல்! வாங்கல்! என்ற நியதியில், **விதி!** என்ற (காலதேவன்) காலம் நழுவாமல்; **நடத்துகிறது! கருவிகரணங்கள்!** இயங்குகின்றன. அவ்வியக்கத்தால், **புண்ணியபாபவினை! முடிவுறுகிறது!!** அங்கு **மனம்** சர்வார்ப்பணத்தால், **நிறைவுறுகிறது!** என்ற திடஉறுதியில்,

# நித்தியாவின் கேள்வியும் ஓர் பைத்தியத்தின் பதிலும்





இப்பாடலில் முக்கிய (65)
குறிப்பு யாதெனில்

நற்பிரம்மம்! விவேகம்!
வலிமை! உள்ளதீரர்!
எந்தகுரு.

விதி முடிக்கிறது.
வினை. முடிகிறது.
மனம் சர்வார்ப்பண

இயக்கத்தில் கரைந்து மயமாகிறது என உணர்.

சந்தேக, கலக்க, கலங்க, பயமின்றி!
இருப்பவனே (இருப்பவனே) நற்பிரம்ம விவேக
வலிமை உள்ள அதிதீரர் ஆகும்.
இவர்கள் ஸம்ஸாரிகளல்ல! பிரம்மச்சாரிகளே!!
அந்த ஐம்பதாவது பாடலில், மேலும் சில வரிகளை நோக்குக.
(சரீர)
பலபல! விதமாக, தோன்றும் சுகம்! எல்லாம்,
பரப்பிரம்மத்தின், சுகமே. இதன் உட் பொருள்:—
காலாதீத பரமும்! அதன் அம்ஸ, நிழலான
மாயாவும்! இணைகிறது. ஆகவே நாமரூப, ஜீவ
(தூல) தேஹ
ஜீவ, தேஹ தோற்றம் உண்டாகிறது.
கனவிலும் அதை, விஷய (இன்பம் என எண்ணாதே.
தைரியமாக! திட உறுதியோடு!
பரமும்! மாயாவும்! உண்டுபண்ணிய மனம்! பொம்மைகள்
ஆடிக்களிக்கிறது. அதனால் வினைகள் ஒழிக்கப்படுகிறது.
என ஸத்தியமாக நம்பு! நலம் பெறுவாய். ஆனந்தம்
பெருவாழ்வு அடைவாய்.



நான்! என்றவ்! "
எனது! மமதை
வேண்டவே வேண்டாம்
அதனைப் பற்றும் மனதின்
துன்பம், போதும் போதும்.
சாதனை யென்பதே, அம்
மூன்றையும் நிர்மூலமாக,
விட்டொழிப்பதுவே யாகும்.

மற்றைய மூன்று! நிலைகளையும் உலகர்
அனுபவ நிலைகள் எனயாதும்
மாறா வேண்டும்.

உன் வாக்கே வாழ்க்கையாக! அமைகிறது.
நான் என்றவ் ஒன்றே
" (என்றவ்) சாதனையாக! மாறுகிறது.
நான்காவது! என்றவ் ஜீவ! கர்த்தத்துவம்.
அவன் இவன்! அவள் இவள்! "ஈச! "
இது! அது! என நம்மை, ஓர் அஃறிணை
பொருளாக
செயலற்ற ஜடமாக மாற்றினால், அது குரு பர
சைதன்யம் ஆகும்.

ஜீவ ஈச! பிரம்மம் கர்த்
தத்துவத்தோடு கூடியதாகும் ஆனால்
தத்துவம் இல்லாதது அது
பரம் தத்துவம்
தாமே தாமாய் ஆவது!

யாம் & நாம்! என்றவ், ஸ்ரீமக வாக்கியம்!
பரசொரூபத்தையும்! இணைத்து, உண்மையான
நிலையில் ஒன்றை! க்கு இட்டுச் செல்லும் என
ஸ்ரீமஹான்களின் வாயிலாக அறிகிறேன்.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!